**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**CC. No.1347/2022 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ரவிசந்திரன் | த–பெ | கருப்பையா |
| ஊர்: | : | இளையான்குடி | | |
| வயது: | : | 56/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் இளையான்குடியில் வசித்து பள்ளத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி திரு.சண்முகம் என்பவர் பணி ஓய்வின் காரணமாக வரஇயலாத சூழ்நிலையில் அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கினங்க எதிரி தரப்பில் ஆட்சேபனையின்றி நீதிமன்ற அனுமதியுடன், ஆவணங்களின் அடிப்படையில், அவரது கையொப்பம் தெரிந்த நான் சாட்சியம் அளிக்கிறேன்.

விசாரணை அதிகாரி 29.09.2020 அன்று 9.30 மணிக்கு நிலைய பணியில் இருந்த போது கானாடுகாத்தான் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மருதாயி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண்.183/2020 இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் அ.சா.ஆ.3. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4.**

பின்னர் இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் சம்பவயிடம் சென்று அன்றைய தினம் காலை 11.30 மணிக்கு சாட்சிகள் அய்யப்பன் மற்றும் லட்சுமணன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5, பார்வை மகஜர் அ.சா.ஆ.6**. பின்னர் வழக்கின் எதிரியை தேடி சென்ற நிலையில் எதிரியானவர் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் சிவகங்கையில் முன் ஜாமீன் பெற்றுவிட்ட காரணத்தால் அவரை கைது செய்ய முடியவில்லை. பின்னர் இந்த வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த ஜெயபாண்டியன் அரசு மருத்துவர் கானாடுகாத்தான் என்பவரை விசாரணை செய்து அவரிடம் இருந்து காய சான்றிதழ் பெற்று அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்றிதழ் அசாஆ 7**. மேற்படி காயத்தின் தன்மைக்கு ஏற்ப வழக்கின் சட்டப்பிரிவை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கையை கனம் நீதிமன்றத்தில்

சமர்பித்துள்ளார். **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அசாஆ 8.** பின்னர் வழக்கின் விசாரணை நிறைவு செய்து 09.11.2020 குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை முறையாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் கூறியது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகார் மற்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் புகார்தாரர் பிறழ்சாட்சியாக மாறிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.18 15:06:02 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.